# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்

J
A
M
A
K
K
A
R
A
N

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 11
NOVEMBER 2024 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

இந்த மாதமும் ஜாமக்காரனை வெளியிட கர்த்தர் அருள்புரிந்தார். அவருக்கு மகிமை உண்டாவதாக.

நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் யாவும் பத்திரிகை ஊழியத்துக்கு மிகவும் போதுமானதாக இருந்தது என்றாலும் பத்திரிக்கை உங்களுக்கு அனுப்ப மிக தாமதமானது, உங்கள் பொருமைக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். தொலைபேசி மூலமாக ஜாமக்காரன் எப்போது வரும் என்று தினசரி கேட்டுக்கொண்டே இருந்தனர். உங்கள் ஆவலை நினைத்து பெருமையாக இருக்கிறது. அதற்காக தேவனை துதிக்கிறேன்.

இந்த மாதம் **என் மரணத்தை குறித்து** சில விவரங்களை எழுதியுள்ளேன். சில வருடங்களுக்குமுன்னே **திரும்பிப் பார்க்கிறேன்** என்ற தலைப்பில் இதே விவரத்தை எழுதினேன். இந்த முறையும் புதிய வாசகர்களுக்காக மறுபடியும் வெளியிடுகிறேன்.

கர்த்தர் தாமே உங்கள் யாவரையும் ஆசிர்வதிப்பாராக. உங்கள் யாவருக்காகவும் ஜெப குறிப்பு அனுப்பியவர்களக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**- Dr. Pushparaj**

# NOVEMBER - 2024

# என் அண்ணா

Dr. **லில்லியன் ஸ்டான்லி,** M.B.B.S., D.C.H.,

நான் **இயேசுவின் தம்பி யாக்கோபு.** ஏழை குடும்பத்தில் **நாசரேத்** என்னும் ஊரில் பிறந்த நாங்கள் ஐந்து சகோதரர் மற்றும் சகோதரிகள், அப்பா தச்சர், அம்மா இல்லத்தரசி. நான் இந்த போது எங்கள் அண்ணன் இயேசு வித்தியாசமாகவே இருந்தார். முரண்டு பிடிக்க எங்களை போலல்லாது பெற்றோருக்குக் கிழ்ப்படிவார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றால் அயலகத்தவரின் செல்லமானார்.

தேவ கரம் அவர்மீது இருந்ததில் சந்தேகமில்லை. நாங்கள் அவரோடு சண்டை போட அம்மா, அப்பா அனுமதிப்பதில்லை. ஏதோ **அதிசயப் பிறவிப்போல்** அவரை நடத்தினர். அவர் கோபப்படமாட்டார். எங்களைப்போல் தப்பு தன்டாக்களில் ஈடுபடமாட்டார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் வேத வாக்கியங்களைப் படிப்பதும், ஜெபிப்பதுமாக இருந்தாலும், சாயங்காலம் எங்களோடு சேர்ந்து விளையாடுவார். குடும்ப ஜெபத்தில் சரமாரியாக வசன மழை பொழிந்து எங்களை அசத்துவார். எனக்கு பத்து வயதாயிருக்கும்போது வருடா வருடம் செல்வதுபோல எருசலேமிற்கு பண்டிகைக்குச் இம்முறையும் சென்றோம். திரும்பினபோது 3ம் நாள் அவரைக் காணவில்லை. அம்மா அப்பா பதட்டத்தோடு திரும்பப் பொடிநடையாய் எருசலேம் சென்றால் அங்கே வேத பண்டிதரோடு ஆலயத்தில் விவாதித்துக்கொண்டிருக்கிறார் ! (லூக் 2:42-52).அவரை என்னவென்று சொல்வது !

அப்பா இறந்தபோது இயேசு வாலிப்பனாயிருந்தாலும் குடும்ப பொறுப்பை தன் மீதே ஏற்றுக்கொண்டு எங்களைக் கவணித்தார். தச்சு வேளை கற்பித்து பயிற்றுவித்தார். தச்சுக்கலையின் நுனுக்கங்களை அவரிடமிருந்தே கற்றுக்கொண்டேன். அன்போடும் அரவணைப்போடும் எங்களை பராமரித்தாலும் அவரது உறுதியான அதிகாரம் எங்களுக்கு எரிச்சல் மூட்டியது. அவரே எல்லா திர்மானங்களையும் எடுத்தார். ஒத்துக்கொள்ள சில வேளை கடினமாயிருந்தாலும் அது எங்களுக்கு நல்லதாகவே முடியும்.

ஒருமுறை அவரோடு ஒரு கல்யாணத்துக்கு கானாவூர் சென்றிருந்தோம். திராட்சை ரசமும் இல்லை என்று ஏதோ கிசுகிசுப்பு. பின்பு சூப்பர் ரசம் பரிமாறப்பட்டது. பின்புதான் அது அண்ணா செய்த அற்புதம் என்று அறிந்தோம். ஆனாலும் அவரது திறமையை பாராட்ட எங்களுக்கு மனமில்லை. (யோ. 2:1-12)

அவருடைய பல நண்பர்களும் எங்களுடனே சுற்றித்திரிந்து எங்கள் குடும்ப உறவுக்குள் நுழைந்தது வேண்டா வெறுப்புதான் என்ன செய்ய ? (வச. 12)

அண்ணன் பிறந்த விதத்தை பெற்றோர் சொன்னது எங்களுக்கு புராணக் கதைபோல் தெரிந்தது. அவர் மேசியா என்பதை நாங்கள் நம்பாவிட்டாலும் அவர் எங்களை கோபித்துக்கொள்ளவில்லை. அவர் எங்களுக்கு அண்ணன் அவ்வளவுதான். மிக சாதாரணமாக எங்களில் ஒருவராக, எங்களோடு உண்டு, உறங்கினார், அவரை நேசிக்கிறேனா, வெறுக்கிறேனா என்று எனக்கே தெரியவில்லை.

அவருக்குத் திருமணம் யோசித்துக்கொண்டிருந்தபோது திடீரென குண்டைத் தூக்கிப்போட்டார்..........

முழு நேர பிரசங்கியராக போகிறாராம். அதிர்ச்சி அடைந்தோம் ! ஆனால் வீட்டின் காரியங்களை கவணிக்கத் சிறந்தபயிற்சி ஏற்கனவே அவர் எங்களுக்கு அளித்திருந்ததினால் எங்கள் கால்களிலேயே நாங்கள் நிற்க முடிந்தது. சொல்லப்போனால் ஒரு விதத்தில் ஆறுதல்தான்– அவரது பிடியிலிருந்து விடுதலை தானே ?

எங்கள் உறவினன் யேவானைப்போல இவரும் தனக்கு சீடர்களைச் சேகரிக்கிறார் என்ற செய்தி எட்டியது. யோவான்தான் பிரசங்கித்து கொண்டிருக்கிறானே. பின்னர் இவருக்கு ஏன் இந்த வேலை? அற்புதங்களை செய்கிறாராமே! இந்த கூத்தையெல்லாம் நம்புவது யார்? புயலை அடக்கினாரென்றால் அந்த நேரத்தில் யதேச்சையாய் கடல் அமர்ந்திருக்கும் அது அவரது வார்த்தையாலே என்று நினைத்திருப்பர். இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவுகளுக்கு விளக்கங்கொடுக்க முற்பட்டோம். பன்னிரெண்டு சீடர்களுடன் துவங்கின அவரது ஊழியம் ஆலமரமாக வளர்ந்தது.

ஒரு சனிக்கிழமையன்று குடும்பமாக ஜெபாலயேத்திற்கு சென்றிருந்தோம். திடீரென்று அண்ணன் எழுந்து சென்று மேடையிலிருந்து பிரசங்கிக்க துவங்கியது எங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சி அளித்தது. சபையார் ஆச்சரியத்துடன் இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தன? இவன் தச்சனுடைய மகனல்லவா ? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்கு சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லோரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று அங்கிருந்த எல்லோரும் பேசிக்கொண்டது எங்கள் காதுகளில் விழுந்தது. பழக்கப்பட்டவன் என்பதினாலே அவர் ஒரு **தீர்க்கதரிசி** என்பதை அவர்கள் நம்பாதது அண்ணாவுக்கு வருத்தமே. நாங்களும்தான் நம்பவில்லை. (மத் . 13:54-58)

மற்றொரு முறை ஜெபாலயத்தில் **ஏசாயாவின்** சுருளிலிருந்து **மேசியாவின்மேல் ஆவியானவர்** இருந்ததை விளக்கும்போது சிலேடையாக தானே **மேசியா** என்பதுபோல் பேசினார். அவர் வேத வாக்கியங்களை அற்புதமாக விளக்குவதை கண்டு முதலில் சபையார் மெய்சிலிர்ந்தாலும் நாசரேத் மக்களை இறக்கி பேசியதும், அங்கிருந்த மக்கள் சீறத்துவங்கினர்.

அவரை ஊருக்கு வெளியே தள்ளி எங்கள் ஊர் கட்டப்பட்டிலிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரை தலைக்கீழாக தள்ளிவிடும்படி அங்கு கடத்திக்கொண்டுப்போனார்கள். அதிர்ந்து போனோம். அம்மா மயங்கிவிழுந்தார்கள். எப்படியோ அந்த கொலை முயற்சிக்கு அண்ணா தப்பித்துக்கொண்டார். (லூக். 4:16-30)

அடாது செய்வார். படாது படுவதுதான் . இதற்கு பிறகே எங்கள் குடும்பத்தை சபையார் ஓரக்கண்ணால் பார்க்க துவங்கினர். குடும்ப தலைவன் என்பதினால் ஒரு காரியம் குறித்துப்பேச அம்மாவோடு அவரை பார்க்க சென்றோம். அப்பாடியோ! அந்த அறைக்குள் மக்கள் சந்தைக்கடை பொம்மைகள்போல் அடுக்கடுக்காக அமர்ந்து திருந்தனர். அவரருகிலேயே போக முடியவிடில்லை எங்கள் வருகை அறிவிக்கப்பட்டே பாது அவர் என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி தன் கையை சீடருக்கு நேரே நீட்டி இதோ என் தாயும் சகோதரர்களும் இவர்களே ! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவன் எவனோ, தேவனுடைய வசனத்ததை கேட்டு அதின்படி செய்கிறவன் எவனே அவனே எனக்கு சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார். (மத். 12:46-50,, லூக் 8:19-21)

எங்களை சுத்தமாய் கலற்றிவிட்டுவிட்டானே எனப் புன்பட்டோம்.

பின்பு தன்னையே **இறைமகன்** என்றும் **மேசியா** என்றும் தம்பட்டம் அடித்துகொண்டதாக செய்தி வந்தது. இது மூளைக்கோளாரா ? அல்லது பிசாசு பிடித்திருக்கிறாதா? அவரை இழுத்துக்கொண்டு வர முயற்சித்தும் முடியாமல் போனது (மாற் 3:21) அவர் அவரது கட்டுக்கதைகளுக்கு அம்மா ஒத்து ஊதினதால் அவர்கள் மீதும் எங்களுக்கு கோபம்தான் எங்கள் உறவினன் **யோவான்** கிருக்கு பிடித்தவன்போல ஒட்டகத்தோலைப் போர்த்துக்கொண்டு வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் சாப்பிட்டுக்கொண்டு வனாந்திரத்தில் திரிகிறானே என்று கவலைப்பட்டோம். அடப்பாவமே! ஊரோடு ஒத்து வாழ வேண்டாமா? (மத் 3:4)

**யூதர்களை** ரோம **ஆதிகத்திலிருந்து** இயேசு விடுதலையாக்கி ஆளுவார் என்று பேச்சு அடிப்பட்டது. சிரித்தோம். நீர் அரசரானால் நான் பணக்காரராகிவிடுவோம். அண்ணா என்று கிண்டலடித்தோம். அண்ணாச்சி பொறுமைசாலிதான்! அவர் கொல்லப்பட்ட மூன்றாம் நாள் உயிரோடு வந்துவிடுவதாக சொன்னதாகவும் ஒரு வதந்தி, மண்கோட்டை வைத்துக்கொண்டு மனக்கோட்டை கட்டகூடாது.

அண்ணா மிகவும் பிரசித்திபெற்று ஒரு பெருங்கூட்டம் அவர் பின்னே எருசலேம்சென்றது. அங்கே அவர் செய்ததோ கொடுமை. ஆலய வளாகத்திலிருந்த கடைக்காரர்களை ஈவிரக்கம் இன்றி அடித்து விரட்டினார். (மத். 21:12,13) ஆலயத் தலைவவர்களின் முகத்தில் இனி எப்படி முழிப்போம்? பரிசேயரையும், சதிசேயரையும் தரைமேல் தூக்கி வைத்திருக்கிறோம். ஆனால் இவர்கள் நாடகம் ஆடுகிறார்கள் என்று இயேசு அவர்களை வெளுத்து வாங்கினார். (மத் 23) அவர்கள் கோபக்கனலை எங்கள் பக்கம் திருப்பினால் என்ன செய்வோம் ? கடவுளே காப்பாத்தும் ! நன்றாக ஊர் சுத்த கற்றுக்கொண்டார். (மாற். 1:38, 6:53, 7:24,31) அதுவும் சில வெட்டிப் பசங்களோடு ! சமுதாயத்தில் சம்பாதித்து முன்னேற விருப்பம் கிடையாது. ஏதோ கடவுள்போல இவர் பாவங்களையும் மன்னிக்கிறாராம். ஆனால் நாசரேத் வாசிகளே அவரை மதிப்பதில்லை (மாற் 6:3-5) தன்னைக்குறித்து ஓவரா நினைச்சிக்கிறார் என்றனர். சொந்த ஊரில் பிரமாதமாக எதுவும் அவரால் செய்ய முடியவில்லை. எனவே மக்கள் அவருக்கு முதுகைத்தான் காட்டினர். சொந்த நாட்டைவிட்டு வெளியே போகாதவர் உலகையே இரட்சிக்க போகிறாராம். ஹ! ஹ!

நாங்களும் அண்ணனை நம்பவில்லை. எனவே கூடார பண்டிகை நெருங்கியபோது நீ யூதேயாவுக்கு போய் எல்லாவற்றையும் செய்ய வேண்டியதுதானே. அங்கிருப்பவர்களும் உன் செயல்களை பார்க்கட்டுமே என்றோம். யூதர்கள் அவரை கொல்லப்பார்க்கிறார்கள் என்று அறிந்திருந்தோம். சாகட்டும் எங்கள் பெயருக்கு ஊறு விளைவித்தார். இவர் மேசியாவானால் தப்பித்துக்கொள்ளட்டும். இங்கே ஏன் ஒளித்துக்கொள்ள பார்க்கிறார்? அவரோடு சம்பந்தப்பட்டவர்களாக எங்களை காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் அவருக்கு போக மனமில்லாததால் நாங்கள் புறப்பட்டோம். பின்பு இரகசியமாக வந்தார். இறைமகன் என்றார் மனிதருக்கு பயப்படவேண்டுமோ? (யோ. 7:1-10)

எருசலேமில் யூதர்கள் அவரை கொலை செய்ய நினைத்தாலும் யாரும் அவரை தொடவில்லை. கடவுளிடதிலிருந்து வந்தேன் என்று தைரியமாக துருத்தியை ஊதிக்கொண்டிருந்தார். (யோ. 7:27-29)

அவர் எங்கள் குடும்பத்தில் ஒருவர் என்பது ஊரறிந்த உண்மை. ஆனால் இவர் **வானத்திலிருந்து**

**இறங்கி வந்தேன்** என்று கப்சா விடுகிறார். (6:42) என்னத்தை சொல்ல ? அவரை சுற்றி பெருங்கூட்டம் மக்கள் **சுகமடைந்தனர்.** பிசாசுகள் **ஓடின** என்பதெல்லாம் உண்மைதான். (7:31) மக்கள் இப்படியும் அப்படியுமாக பேசினார். சிலர் அவர் நல்லவர் என்றனர் மற்றும் சிலர் இவன் காதில் பூ சுத்துகிறான் என்றனர். (வச. 12) சிலர் இவன் நிச்சயமாகவே தீர்க்கதரிசியானவர்தான் என்றனர், வேறு சிலர் இவரே கிறிஸ்து என்றனர். (வச. 40,41) வயதுக்கு மிஞ்சிய ஞானம்தான் இவருக்கு திடுக்கிட வைக்கும் அற்புதங்களையும் செய்ததாக கேள்விப்படும்போது தலை சுற்றுகிறது, தான் சொல்லுகிறபடி இவர் மேசயாதானோ என நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் எப்படி ? நம்மைபோல தானே இருக்கிறார் ! மேசியா இப்படியா வருவார் ? என்னில் பாவம் உண்டென்று உங்களிள் யார் என்னை குற்றப்படுத்தக்கூடும் ? என்று கேட்கிறார். (8:46) சரியான கேள்விதான துருவித்துருவி பார்த்தாலும் சுட்டிக்காட்ட ஒன்றுமில்லையே?

ஏரோது அரசரின் கோபத்துக்கு யோவான் அண்ணனின் தலை பலியானது. (மாற். 6:27) எல்லாரையும் குற்றங்சாட்டுவதை விட்டுவிட்டு இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை வாழலாம். சொன்னால் கேட்பவரா இவர். எல்லாரையும் தட்டிக்கொடுப்பதை விட்டு (அதுவும் வைர மோதிரகாரரை) எல்லாரையும் பகைத்துக்கொள்கிறாரே. நாங்களும் அற்புதங்களை நம்பாமல் இல்லை. எலிசபெத் அத்தை குடுகுடு கிழவியான பின்புதான் அவர்களுக்கு யோவான் அண்ணன் பிறந்தார். ஆனாலும் பரிசுத்த ஆவியினாலேயே கர்ப்பமானேன் என்று அம்மா சொல்வது டூமச். அதுவும் தீர்க்கதரிசி சொன்ன கர்ப்பமான **கன்னி** நான்தான் என்று வாய் கூசாமல் சொல்கிறார்கள். (லூக். 1,2)

குரோதம் வளரவே மூப்பர்களின் கொலைத் திட்டம் வலுக்கிறது என்று கேள்விப்பட்டு பதறினோம். எங்களை அவரோடு அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. அம்மா இருதலைக்கொள்ளி எறும்பாய்த் தவித்தார்கள். ஒரு பக்கம் அவர் இறைமகன் என்று நம்பினார்கள். மறுபக்கம் அவர்கள் எதிர்பார்த்ததுபோல் ஒன்றும் நடக்கவில்லை. யானையை தடவிப்பார்த்த ஐந்து குருடர்கள் போல் ஆளுக்கொன்று சொன்னோம். அவர் கைது செய்யப்பட்டு சிலுவையிலறையப்படக் கொண்டுசெல்லப்படுகிறார் என்ற செய்தி வந்தது. இவரைக் காப்பாற்ற ஓடுவதற்கு நானென்ன என் சகோதரனுக்கு காவலாளியா? இளவேனிற்காலத்தில் இலையுதிர் காலமாகிவிட்டாரே என்று ஒருபக்கம் கவலைத்தான். தனக்கே குழி தோண்டிக்கொண்டார். அம்மா போவதை நாங்கள் விரும்பவில்லை. பெத்தமனம் பித்து தானே? தவிப்புடன் உடனே புறப்பட்டு சென்று எருசலேமில் இயேசுவின் சீடர்களுடன் இணைந்து கொண்டார்கள்.

சிலுவையிலிருந்து அம்மாவிடம் அண்ணன் பேசினதாகவும் அவர்களைத் தனது தாயாக ஏற்றுக்கொள்ளும்படி யோவானிடம் சொன்னதாகவும் கேள்விப்பட்டோம், நல்லதுதான். அவர் இறைமகன் என்று அம்மா நம்பினதால் வீட்டிற்குள் இடியாப்பச் சிக்கல். அந்தப் பொய் தகர்த்தெறியப்பட்டது. இறைமகன் சாவாரா? என் உடன்பிறப்பை புதைப்பதை எனது கடமையாய் எடுத்திருக்க வேண்டும். ஆனால் அந்தப் பக்கமே எட்டிப்பார்க்க நான் விரும்பவில்லை. நான் ஏன் செலவழிக்க வேண்டும்? மக்களை ஏமாற்றி பணம் பறித்துப் பணக்காரரான அவரது நண்பர்களே செலவு செய்யட்டுமே.

மூன்று நாட்கள் மயான அமைதியில் கழிந்தது. சிலுவையில் அண்ணன் அறையப்படுவதைப் பார்க்க

கலிலேயர் பலர் எருசலேம் சென்றிருந்தனர். திரும்பி வந்தவர்கள் செய்தி சொன்னார்கள். ஆய் ஊய் என்று பேசிவிட்டு இப்படித் துடிதுடித்துச் சாவானேன்? பேதுரு, யோவானும் அவருக்கு நெருக்கமாயிருந்தவர்களும் எருசலேமில் தங்கிவிட்டனர். பயந்துபோய் எல்லோரும் குழுவாகக் கதவை அடைத்துக்கொண்டு இருக்கிறார்களாம். எங்கள் அண்ணனால் எல்லாருக்கும் கஷ்டம். எங்கள் வீடு சிலுவையில் அறையப்பட்டவன் வீடு என்று பட்டம் சூட்டப்பட்டது.

ஞாயிறு சாயங்காளம் கதவைத் தட்டும் சத்தம். வெளுத்த முகத்துடன் நண்பர் ஒருவர் நின்றார். அண்ணாவைப்பற்றி எதுவும் கேள்விப்பட்டீர்களா? என்றார். கேள்விப்பட என்ன இருக்கிறது? ஆண்டாண்டாய் எங்கள் குடும்பம் சம்பாதித்த நற்பெயரைத் துடைத்தெரிந்துவிட்டு அவரும் தொலைந்தார் என்று எரிச்சலுடன் பதிலளித்தேன். அவரைச் சிலர் பார்த்ததாக நீங்கள் கேள்விப்படவில்லையா? என்றாரே பார்க்கனும். என்னென்ன? உயிரோடா? படபடத்தேன். ஆம் ஒன்றுக்கும் அதிகமானோர் பார்த்திருக்கின்றனர். அவரது உயிர்தெழுதல் பற்றிய பேச்சு காட்டுத்தீயாய் பரவி வருகிறது என்றார். என் கால்கள் நடுங்கின. அந்தக் குளிலிரும் வியர்த்து விறுவிறுத்தேன். இதயம் தடக் என்றது . அவர் சொன்னபடி அவர் மேசியா தானோ? இடிகேட்ட நாகம் போல் நடுநடுங்கினேன்.

மிகுந்த கலகத்துடன் நடந்தவற்றை அசைபோட்டுக்கொண்டே உடனடியாக எருசலேம் புறப்பட்டேன். அம்மாவையும் மற்றவர்களையும் சந்தித்தேன். அவர்கள் முகங்கள் ஜொலித்தன. அவர்கள் சொன்னது உண்மைபோல தோன்றினாலும் அவர்களிலும் சிலர் சந்தேகப்பட்டதால் எனக்கும் சந்தேகம் தீரவில்லை. பரவசத்திற்கும் குழப்பத்திற்குமாக ஊஞ்சலாடினேன். சில நாட்கள் என் மனது குழம்பின குட்டையாயிருந்தது. அதன்பின் ஒரு நாள்-- **அவர் எனக்கும் தரிசனமானார்!** என் அண்ணல்ல, என் ஆண்டவர் !!! (1 கொரி. 5:7) அவரது திருக்குரல் கேட்டேன். விழிகள் நிர்வீழ்ச்சிகளாயின. பயத்தோடும் பரவசத்தோடும் நடுங்கி அவர் பாதம் விழுந்தேன். இனி குழப்பமில்லை, ஒரு புதிய நான் பிறந்தேன். எங்களோடுகூட இறைமகன் முகமுகமாய் முப்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலும் அவரை அடையாளம் காணாமல் போனேமே. என் தேவன் ! என் ஆண்டவர்! என் அண்ணா! என் மனநிலை ராட்டினம் சுற்றியதான். காலமெனும் சாலையில் ஓடி அவர் பாதம் முத்தம் செய்து மன்னிப்புகோர துடித்தேன். அவருக்கு நான் செய்ததையெல்லாம் மறந்து ஏன் என்னைத் தெரிந்துகொண்டார்? அதுதான் கிருபை! ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமானது, அணையுடைத்துக் கிளம்பியது மகிழ்ச்சி

எங்கள் உடன்பிறந்த அண்ணன் இப்போது எங்கள் ஆன்மீக அண்ணனும் கூட என் முதல் வேலை என் தம்பி தங்கைகளை ஆண்டவர் பாதம் கொண்டு வருவதுதான். நாங்கள் குழுவாக மேலறைக்குச்சென்று ஜெபித்து துதித்துக்கொண்டிருந்தபோது பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டோம். (அப். 1:14 2:1-4) இவ்விதமாகத் துவங்கின எனது ஆன்மீக பயணம் என்னை முதல் கிறிஸ்தவ சபையின் மூப்பனாகக் கொண்டுச் சேர்த்தது.. தாழ்வில் துவங்கி சபையின் உச்சமட்டக் குழுவோடு இணைக்கப்பட்டது. ஒரு நம்ப முடியாத பயணம் பேதுரு. அந்திரேயா, யாக்கோபு, யோவான் மற்றவர்களின் பொன்னான வாழ்க்கையைப் பாழாக்கிப்போட்டானே என் சகோதரன் என்று புலம்பினேன். இன்று அவர்களைப் பார்க்கும்போது தங்கள் வலைகளைத் தூக்கி எறிந்துவிட்டு மனிதரைப் பிடிக்கிறவர்களானதைக் கண்டு அகமகிழ்கிறேன். புகைபோல்

மறைந்து போயிருக்கவேண்டிய அவர்கள் பெயர்கள் இன்று பொன்னேடுகளில் பதிக்கப்பட்டிருக்கின்றன. எனது தச்சுப் பட்டறையை இழுத்து மூடிவிட்டுப் பிறர் கையைப் பார்த்து பிழைப்பது கடினமாகத் தெரிந்தது. ஆனாலும் தைரியமாகச் செய்தேன். இன்று வரை அதற்காய் கவலைப்படவில்லை. உலகத்தை இறுகப் பற்றியிருந்த என் விரல்கள் தளரத் துவங்கின. இன்று இறைவார்த்தையை வாசிக்கும்போது யாவும் டக்டக் எனப் பொருந்துகின்றன. அவர் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் !

தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்தவுக்கும் ஊழியக்காரனாக நான் இப்போ என்னை பார்க்கிறேன்? (யாத். 1:1) ஆதித் திருச்சபையின் மூப்பனாக ஏற்றுக்கொள்ளப்பட்டதர்காய் தேவனைத் துதிக்கிறேன். சிறைச்சாலையிலிருந்து பேதுரு அற்புத விடுதலை பெற்றபோது உடனே எனக்குச் சொல்லி அனுப்பினார். (அப். 12:17) புற வினத்தவர் இரட்சிக்கப்பட **விருத்தசேதனம்** அவசியமில்லை என்ற இறுதிக் கருத்தை எருசலேம் குழுமத்தில் எடுத்துரைப்பது என் பொறுப்பாயிற்று. அதனால் சர்ச்சை முடிவுக்கு வந்தது. (அப் 15:13-22) புறவினத்தவர் நடுவில் பவுல் நட்சத்திரமாய் ஜொலித்தார். மற்ற மூப்பர்களையும் என்னையும் எருசலேமில் சந்தித்து புறவினத்தவர் நடுவில் நடந்த ஊழியத்தை விவரித்தார். நாங்கள் கர்த்தரை மகிமைப்படுத்தி அவருக்குச் சில ஆலோசனைகளைக் கூறினோம். (அப். 21:17)-19) மறுபடியும் என்னை பவுல் எருசலேமில் சந்தித்தார். (கலரா 1:19) பேதுருவுக்கும் யோவானுக்கும் இணையாக சபையின் தூணாகக் கருதப்படுவதற்கு நான் அருகதையற்றவன். பவுலுக்கு அளிக்கப்பட்டக் கிருபையை அறிந்தபோது நாங்கள் விருத்தசேதனம் உள்ளவர்களுக்கும் அவர்கள் புறவினத்தவருக்கும் பிரசங்கிக்கும்படி அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக பவுலுக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து தரித்திரை நினைத்துக்கொள்ளும்படிக்கு ஆலோசனை கூறி அனுப்பினோம். (2:9,10) நியாயப்பிரமாணத்தினாலல்ல, விசுவாசத்தினாலேயே பிழைக்கிறோம் என்று நாளடையில் புரிந்துகொண்டேன் (வச 12)

திருச்சபை குறைவற்றதாக இல்லை. கிறிஸ்தவர் சோதனையில் தடுமாறி விழுந்தனர். நாவினால் ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்தினர். செல்வந்தர் செருக்குற்றியிருந்தனர். எனவே சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும் ஒரு கடிதம் எழுதினேன். அதற்கும் கர்த்தர் அருளின் அபிஷேகத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அக்கடிதம் எழுதிய கொஞ்சம் காலத்திலேயே கி.பி. 70 இல் யூதர்களை இறுதியாக ரோமர் நசுக்கி அவர்களுக்கென்று நாடே இல்லாமல் சிதறடித்தனர். (1,878 ஆண்டு தொட்டு இன்றைய இஸ்ரேல் 1946 இல் நிறுவப்பட்டது. என் அண்ணாவின் பிரசன்னத்திற்கு மகிழ்வாய் நிறைவுபெற்றவனாய் சீக்கிரம் சென்றடைவேன் என்று பரவசமடைகிறன். முப்பத்துமூன்று ஆண்டுகள் இறைமகனோடு இவ்வுலகில் வாழ்ந்தேன் என்று பொறாமைப்படுகிறீர்களா? அட விடுங்கள், நீங்கள் அவருடைய வார்த்தையை வாசித்து அவர் கட்டளைகளின்படி செய்து அவர் சித்தம் செய்தால் **உங்களுக்கும் அவர் அண்ணாதான்** (எபி. 2:11,12) அநேக சகோதர சகோதரரிகளுக்குள்ளே **அவர் மூத்தவ**ர் என்று பவுலும் எழுதுகிறார். எனவே அவர் சாயலாய் மாறும் பொறுப்புடையவர்களாகிறோம் . அதையும் அவரே செய்வார். (ரோ. 8:29) அவருடைய சகோதரனாய் சகோதரியாய் தாயாய் அவரோடு நீங்களும் வாழலாம். வேண்டும்போதெல்லாம் பேசலாம். அப்படியானால் ஆதவனைக் கண்டு அகமகிழும் அல்லியாய் மலருவீர்கள். **காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள்** பாக்கியவான்கள் (யோவா.20:29)



# என் மரணத்துக்குபின்

இந்த தலைப்பை வாசிக்கும்போதே பலர் உள்ளத்தில் பல கேள்விகள் எழும் என்பதை நான் கற்பனையில் உணர்கிறேன்.

நான் மரித்துப்போய்விடுவேன் என்பதை என் சொப்பனத்தின் மூலமாகவோ, தரிசனத்தின் மூலமாகவோ நான் அறிந்துதான் இதை எழுதியிருப்பேனோ என்று சிலர் நினைப்பார்கள்.

சிலர் டாக்டர் புஷ்பராஜ்க்கு ஏதோ பயங்கர நோய் பீடிக்கப்பட்டிருக்கிறது போல் இருக்கிறது. தான் பிழைக்கமாட்டோம் என்ற எண்ணத்தில் இதை எழுதியிருக்கிறார்போல் இருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று கூறுபவர்களும் இருப்பார்கள். சிலர் நாம் கொடுத்த சாபம் பலித்துவிட்டது என்று சந்தோஷப்படுவார்கள்.

இன்னும் சிலர் நாம் உபவாச ஜெபத்தில் டாக்டர் புஷ்பராஜ் பெயரை சொல்லி ஜெபித்ததால் வந்த விளைவு என்று ஸ்தோத்திர கூட்டம் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

என்னை நேசிக்கும் சிலர் நான் இப்படி எழுதியதால் மனவேதனைப்படுவார்கள் என்பதையும் அறிவேன். நீங்கள் சந்தேகிப்பதுபோல் எதுவும் இல்லை. கர்த்தரின் பெரிய கிருபையால் இதுவரை ஒரு நோயும் என்னை அனுமதிக்கவில்லை. ( 1969ம் வருடம் நான் அம்மை நோயால் (Small Pox) பாதிக்கப்பட்ட விவரத்தை என் சாட்சியில் கூறியிருக்கிறேன்) அதற்கு முன்போ, பின்போ இதுவரை வியாதியாலோ அல்லது சிறு தலைவலியாலோ பாதிக்கப்பட்டதில்லை, நான் படுத்த படுக்கையானதுமில்லை.

எந்த ஊழியமும் இதுவரை தடைப்பட்டதில்லை. எந்த என் ஊழியத்தின் மத்தியிலும் வியாதியால் பாதிக்கப்பட்டதில்லை, எந்த ஊழியத்துக்கும் நான் தாமதித்து சென்றதில்லை, இது என் சாமர்த்தியத்தால் அல்ல. என்னை உபயோகித்துக் கொண்டிருக்கும் என் இயேசுவின் சுத்த கிருபை ! கிருபை! கிருபையேயன்றி வேறில்லை.

**கர்த்தருடைய வேலையை அசதியாக செய்கிறவன் சபிக்கப்பட்டவன். எரே.** 48:10

**தன் வேலையில்** (ஊழியத்தில்) **அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச்** (அழிப்பவனுக்கு) **சகோதரன்.** நீதி. 18:9

என் மரணத்துக்குபின் என்ற இத்தலைப்பின் காரணமாக ஒரு வேலை இப்படியும் நினைக்கலாம். பலர் என்னைப்பற்றி பேசும் இழி சொற்கள் தாங்காது நான் தற்கொலை செய்ய திட்டமிட்டிருப்பேனோ? என்றும் சிலர் நினைக்கலாம். ஒருகாலும் இல்லை.

இரட்சிக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள் தற்கொலை செய்ய நினைத்தால் அவர்களின் இரட்சிப்பு சரியில்லை என்று அர்த்தம். ஒருவேளை ஜெபத்துடன்தற்கொலை செய்தாலும் அவர்கள் பரலோகம் செல்ல இயலவே இயலாது என்று பல கூட்டங்களில் பிரசங்கித்துள்ளேன்.

காரணம், அப்படி அவர்கள் தற்கொலை செய்வதின் மூலம் அவர்களை குறித்த தேவனின் திட்டத்தை அவர்கள் தாங்களாகவே மாற்றி தங்கள் வாழ்வை முடித்துக்கொள்கிறார்கள். ஆகவே நிச்சயமாக கர்த்தர் அப்படிப்பட்ட தற்கொலை மரணத்தை அங்கீகரிப்பதில்லை என்பது நிச்சயம். ஆகவே கர்த்தரை நேசிப்பவர்கள் எப்படிப்பட்ட தோல்விகளையும் ஏமாற்றத்தையும் அவமானத்தையும் சகித்து கிறிஸ்துக்காக வாழ வேண்டும். எத்தனை ஆண்டானாலும் கர்த்தர் அனுமதிக்கும் வரை கண்டிப்பாக நாம் கர்த்தருக்காக வாழத்தான்வேண்டும்.

ஆகவே நான் தற்கொலை செய்துகொள்வேன் என்று சிலர் எதிர்பார்த்தால் ஏமாந்து போவீர்கள்.

ஆனால்.....

என் உள்ளத்தில் பரலோக சந்தோஷத்தின் எதிர்பார்ப்பில் வேத புஸ்தகத்தில் எழுதப்பட்டதும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நமக்காக நியமித்துள்ளதுமான அந்த விஷேசித்த நன்மையான ஒன்று என்று எபி. 11:40ல் குறிப்பிடுகிற அந்த சந்தோஷத்தை எபி. 12:2 சீக்கிரம் அடைய மிகவும் ஆவலாக இருக்கிறேன். அதை அனுபவிக்க மிகவும் ஆத்திரப்படுகிறேன்.

பரிசுத்த பவுலும் பிலிப்பியருக்கு எழுதும்போது (பிலி. 1:23) தேகத்தைவிட்டு பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசை உண்டு என்றாலும் கர்த்தருக்காக தொடர்ந்து உயிரோடு இருக்க பாரப்படுவதாக அறிவிக்கிறார்.

அதோடு அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. பிலி. 2:4 என்று தான் உயிரோடு இருப்பதின் நோக்கத்தை அந்த வசனத்தில் வெளிப்படுத்துகிறார்.

இதை குறித்து இயேசு என்ன கூறுகிறார் பாருங்கள். யோ. 17:14,15ல் அவர்கள் உலகத்தாரல்ல. ஆதலால் உலகம் அவர்களை பகைத்தது (பிதாவாகிய) நீர் அவர்களை உலகத்திலிருந்து **எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல்** நீர் அவர்களை தீமையினின்று காக்கும்படி வேண்டுகிறேன் என்றார். அதாவது இந்த உலகத்தில் உள்ள போராட்டம் பிரச்சனை, ஏமாற்றம் இவற்றால் என்பிள்ளைகள் மிகவும் தாக்கப்படுகிறார்கள். ஆகவே சீக்கிரம் இந்த உலக வேதனையிலிருந்து என் பிள்கைள் விடுபட சீக்கிரம் மரித்து பரலோகம்சேர, அவர்களை எடுத்துக்கொள்ளும் என்று தாம் பிதாவுக்கு ஆலோசனை கூறாமல், அந்த பிரச்சனைகளை சமாளிக்க பொறுமையோடு சகிக்கவும் தாங்கவும் தக்கதாக அவர்கள் சோர்ந்து போகும்முன் தீமையிலிருந்து காத்துக்கொள்ளும் என்று மட்டும்தான் இயேசு நமக்காக கேட்டுக்கொள்கிறார். ஆதனால் பவுலும் இயேசு கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று பிலி. 2:5ல் கூறுகிறார்.

ஒரு விசுவாசி இந்த உலகத்தின் பிரச்சனைகளை அல்லது ஜெபித்தும் குணப்படாத வியாதிகள் ஏமாற்றம் போன்ற பலவித துன்பங்களை சகித்து கிறிஸ்துக்காக வாழ வேண்டும் என்பதுதான் இயேசுவின் விருப்பம். அதனால்தான் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆகிலும் திடன் கொள்ளுங்கள் என்று ஆரம்பத்திலேயே நமக்கு ஆலோசனைக் கூறி முன்பே நம்மை எச்சரித்தார்.

சிலர் என்னை எடுத்துக்கொள்ளும் கர்த்தாவே. நான் ஏன் மற்றவர்களுக்கு பாரமாக இருக்கவேண்டும். என்னால் யாருக்கும் பிரயோஜனமில்லை, ஆகவே என்னை எடுத்துக்கொள்ளும் என்று

கேட்பார்கள். இது மிகவும் பிழையான வேண்டுதல். ஒரு வேளை நீங்கள் மிகவும் வயது முதிர்ந்தவராகவும் உண்மையில் உங்களால் பிள்ளைகளுக்கு பாரம், பிரச்சனை என்றாலும் கர்த்தர் ஒரு நோக்கத்தோடு உங்கள் ஆயுளை நீட்டிக்கொடுக்கிறார். உங்கள் மரணத்தின் மூலம் சில மாற்றம் உங்கள் வீட்டில் நடக்கலாம். ஆனால் அது இப்போது நடக்கக்கூடாது என்பது தேவ சித்தமாக இருக்கலாம். அதினிமித்தம் மரண தருவாயிலுள்ளவர்களின் ஆயுளை கர்த்தர் நீட்டி வைத்திருக்கலாம். கர்த்தர் நம்மை என்ன நோக்கத்தோடு இந்த உலகில் வாழவைக்கிறாரோ அந்த திட்டம் அல்லது நோக்கம் நிறைவேறும் வரை நாம் வாழவேண்டும். தேவதிட்டத்தை நாமே மாற்ற முயலக்கூடாது.

வியாதி மாறாமல் இருந்தாலும் அவைகளைச சுமந்துகொண்டுதான் நாம் தேவ திட்டத்தை நிறைவேற்ற கர்த்தருக்காக உயிர்வாழ வேண்டும்.

நான் இரட்சிக்கப்பட்ட புதிதில் பாவத்தில் விழுந்து எழுந்த அந்த நாளில் நிலையாக கர்த்தருக்குள் வாழ முடியவில்லையே என்ற எண்ணமும் பாவ எண்ணங்களிலிருந்து வெற்றி காண முடியவில்லையே என்ற எண்ணமும் மன வேதனையும் என்னுள் வந்தது. அந்த நாட்களில் நான் தற்கொலை செய்தால் என்ன ? என்று நானே நினைத்ததும் உண்டு. ஆனால் ஏற்ற சமயத்தில் பல ஊழியர்கள் மூலமாகவும் வசனத்தின் மூலமாகவும் தற்கொலை கர்த்தருடைய திட்டத்திற்கு விரோதமானது என்று ஆவியானவர் அறிவித்து என்னை பெலப்படுத்தி அந்த தற்கொலை எண்ணத்திலிருந்து தப்புவித்தார்.

ஆகவே இந்த தலைப்பும் கட்டுரையும் நான் தற்கொலை செய்யும் நோக்கத்தோடு எழுதப்பட்டதல்ல. மரிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் எழுதப்பட்டது அல்ல.

ஆனால் நான் மரிக்க எப்போதும் எந்த நிமிஷமும் தயாராக இருக்கிறேன். ஆகவே ஒவ்வொரு விசுவாசியும் மரிக்க ஆசைப்படகூடாது. ஆனால் மரிக்க ஒவ்வொரு நிமிடமும் ஆயத்தமாக, மரணத்துக்கு பயப்படாதவர்களாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்தவே இதை எழுதுகிறேன். கர்த்தர் எனக்கு கொடுத்த ஓட்டத்தை இன்னும் பூர்த்தி செய்யவில்லை. அவர் எனக்கென்று வரைந்த திட்டத்தின் பாதையில் இப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

இந்த ஓட்டம் எப்போது முடியும் என்பதை அறியேன். ஆனால் அதற்குமுன் எச்சரிக்கையாக என் குடும்ப ஒழுங்குகளை இப்போதே சரிப்படுத்திவிட்டேன்.

**என் மகன் (Dr.P. Samuel)**

என் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு என்னென்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் என்னால் இயன்ற அளவு செய்து முடித்துவிட்டேன்.

அதன் பலனாய் உயர்நிலைப்பள்ளி பருவத்திலேயே மகனின் இரட்சிப்பும், பரிசுத்தாவியின் நிறைவின் அனுபவத்தையும் அவன் பெற்றுக்கொண்டதை அறிந்து அதை கண்டு மனத்திருப்தியும் நிம்மதியும் அடைந்திருக்கிறேன். தன் பள்ளி பிராயத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இயேசுவை ஏற்றுக்கொண்ட சில பள்ளி மாணவர்களை கூட்டி சேர்த்து மத்தியான வேளையில் ஜெபக்கூடத்தை என் மகன் நடத்தியுள்ளார். அந்த ஆவிக்குரிய அனுபவம் குறைந்துவிடாதபடி இருக்க தொடர்ந்து ஏற்பாடுகளைசெய்தேன்.

அப்படியே உலக படிப்புக்கான எல்லா உதவிகளும் செய்திருக்கிறேன். உயர் படிப்பு முடித்து இப்போது அவர் சேலம் ஏற்காடு மலையில் டாக்டராக பணி செய்கிறார். அவருக்கு திருமணமும் செய்து வைத்தேன். அவரின் மனைவி **Dr.P. ஏஞ்சலின் ஒலிவியா** அவர்களும் அவர்களின இரண்டு பிள்ளைகளோடு (பெண், ஆண்) சுகத்தோடு வாழ்கிறார்கள்.

என் மகள் **(Mrs. P.Sheeba Evangelin,**M.A.) இரட்சிக்கப்பட்டு இப்போது **Dr. Prabhu Singh, M.A.,M.Th., Ph.D.** (Ambasador for Christ) என்பவரை திருமணம் புரிந்து **அமெரிக்காவில் கெண்டக்கி** மாநிலத்தில் உள்ள ஆஸ்பரி வேதாகம கல்லூரியில் படித்து தன் கணவருடன் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதையும் சந்தோஷத்துடன் அறிவிக்கிறேன். கர்த்தர் எனக்கு கொடுத்த இரண்டு பிள்ளைகளையும் நல்ல விதத்தில் ஆவிக்குரிய வழியில் வளர்த்தி யாரும் குற்றம் சொல்லாத வகையில் அவர்கள் தேவ நாமம் மகிமைப்பட வாழ்ந்து கொண்டிருப்பதை குறித்து தேவனை துதிக்கிறேன்.

எனக்கு மரணம் நேர்ந்தால் எப்படி அதை தாங்கவேண்டும் என்பதை என் பிள்ளைகளுக்கு கூறியுள்ளேன். அந்த நேரத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் கூட அவர்களோடு பகிர்ந்துகொண்டுள்ளேன்.

**இந்த கட்டுரை பல வருடங்களுக்குமுன் எழுதப்பட்டது என்பதை நினைவில் கொள்ளவும். அப்போதைய நிலை வேறு :**

- ☐ மருமகள் **Dr. ஏஞ்ஜலின் ஒலிவியா** அவர்கள் சேலத்துக்கு அருகில் டேனிஷ்பேட்டை என்ற இடத்தில் **Bethel Hospital**லில் டாக்டராக பணியாற்றுகிறார்.
- ☐ **மகளும் மருமகனும்** ஒரு மகளும் இந்தியாவில் பெங்களூர் SAIACS வேதாகம கல்லூரியின் **பிரின்சிபாலாக** ஊழியம் செய்கிறார்.

என் மனைவி **(Mrs. Vathani Pushparaj)** இரட்சிக்கப்பட்டு ஆவியானவரின் நிறைவை பெற்றவராக , பெண்கள் மத்தியில் ஊழியம் செய்பவராக இருப்பதால் என் மரணத்துப்பின் எப்படியெல்லாம் நடந்துகொள்ளவேண்டும், கவலைப்படாமல் எப்படி ஊழியத்தை தொடரவேண்டும் என்பதைபெயல்லாம் அவருக்கும் கூறியுள்ளேன். அவியானவரும் அவரை உணர்த்தி நடத்துவார் என்பதை திட்டமாக அறிவேன்.

என்னுடைய அம்மா நான் பிறந்ததிலிருந்து என்னோடு கூடவே இருந்து தனது 96ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரின் மரணம் வரை அவரை நன்றாக கவனிக்க, அவர்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் அவர்களை சந்தோஷத்துடன் வாழவைக்க கர்த்தர் எனக்கு வாய்ப்பளித்தார் என்பதற்காக கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன். என் கூடபிறந்த அக்காமார்களையும் எப்படி கவனிப்பது. தேவையான சமயத்தில் அவர்களுக்கு இயன்ற உதவி எப்படி செய்வது என்பதையும் என் மனைவி நன்றாக அறிந்தவர்.

இந்த விஷயங்களைக்குறித்து பெண்கள் கூட்டங்களில் என் மனைவியே பிரசங்கித்து இருப்பதால், எனக்காக அந்த காலத்திலேயே என் வீட்டின் சகல குடும்ப பிரச்சனைகளையும் தாங்கி, சகித்து நீண்ட பொறுமையோடு என் குடும்பத்தை நடத்தினார். இப்போதும் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆகவே என் மனைவியை குறித்து என் தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

ஒருவேளை **நான் உயிரோடு இருந்து** என் மனைவியோ என் பிள்ளைகளோ **எனக்கு முன் மரித்துப்போனால்** நான் எப்படி அதை தாங்கிக்கொண்டு என் ஊழியத்தை சந்தோஷத்தோடு தொடரவேண்டும் என்பதையும் என் மனகற்பனையில் யோசித்து திர்மானித்துவிட்டேன். ஆகவே இப்போது நான் எதற்கும் தயாரான நிலையில் இருக்கிறேன்.

பவுல் கூறியதைப்போல் உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச–மோசமோ, பட்டயமோ கிறிஸ்துன் அன்பை விட்டு பிரிக்கமுடியாது. இவை எல்லாவற்றையும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயம் கொள்கிறவர்களாக இருக்கிறோமே ரோ.8:36,37

மரணமானாலும்... அதிகாரங்களானலும்... தாழ்வானாலும் இயேசு கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டார் என்று நிச்சயித்திருக்கிறேன். ரோ. 8:39

நான் மரிக்கும்போது என்னிடம் ஏதாவது பணம் இருந்தால், என் உடமைகள் ஏதாவது இருந்தால், அத்தனையும் என் மனைவி எடுத்து ஆள உரிமை வழங்குகிறேன். எனக்கு பின் என் ஊழியத்தை அல்லது பத்திரிகையை ஊழியத்தை (முடிந்தால்) தொடர்ந்து நடத்துவார் என்று நம்புகிறேன். ஆனால் அவர் நடத்தும் ஜாமக்காரன் நான் எழுதுவதுபோல் நிச்சயம் இருக்காது. அது **ஆவிக்குரிய விஷயங்களை மட்டும் தாங்கி** வருதாக இருக்கும்.

## என் மரணம்

என் மரணம் எப்படியிருக்கும் எப்படி அமையும் என்று ஒரு எதிர்பார்ப்பும் எனக்கு இல்லை.

பிரயாணத்தின் சமயம் நான் மரித்தாலும், பஸ், கார், ரயில், விமானம் ஆகிய எந்த பயணத்தின்போதும் விபத்து ஏற்பட்டு மரித்தாலும், ஒரு வேளை வியாதியிலேயே வியாதியின் படுக்கையில் மரித்தாலும் எப்படிப்பட்ட விபத்தானாலும், அல்லது முதுமை ஏற்பட்டு நடமாட முடியாத நிலையில் படுக்கையிலேயே மரித்தாலும் அல்லது வேறு எந்த விதத்தில் மரித்தாலும்

ஒரு வேளை என் ஊழியத்தினிமித்தம் கோபம்கொண்ட சில எமதர்ம ராஜாக்கள் என்று கருதப்படும் சில குறிப்பிட்ட ஊழியரால் அல்லது எதிர்பாளர்களால் அல்லது R.S.S.போன்ற கிறிஸ்தவ எதிர்ப்புஇயக்கத்தால் அவர்கள் கையால் அல்லது அவர்களின் கூலிப்படையால் அடிப்பட்டு மரித்தாலும், (அப்படியும் மரணம் என்னை தேடிவரலாம் என்பதற்காக இதை எழுதினேன்) அப்படிப்பட்ட மரணத்தை தன் பெரிய பாக்கியமாக கருதுகிறேன். அப்படிப்பட்ட மரணத்துக்கு நான் தயார். இந்த நிமிடம் வரை எனக்குள் ஒரு உறுதியுண்டு. இப்போதும் நன் இயேசுவோடு இருக்கிறேன். மரணத்திற்கு பின்பும் இயேசுவோடு இருப்பேன் என்ற உறுதி எனக்குள் திட்டமாக உண்டு. நான் ஒருவேளை வெளிநாட்டில் ஊழியம் செய்யும்போது நான் மரித்தால், அல்லது வானத்தில் ஆகாய விமானம் பறக்கும் போது விமானம் வெடித்து நான் மரித்தால் என் உடலை என்சொந்த நாடாகிய இந்தியாவில் என் ஊராகிய சேலத்தில்தான் புதைக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

என் உடல் அடக்கம் பண்ணப்பட்டாலும், எனக்கு கல்லறை கட்டவேண்டுமென்பதும் இல்லை. என் உடல் சின்னாபின்னமாக போனாலும் அல்லது எப்படி மரித்தாலும் , அதன்பின் என் உடலை புதைத்தாலும், புதைக்காது அனாதை பிணம்போல் என்பிணம் அழுகி கிடந்தாலும் இயேசுவின் வருகையில் ஆவிக்குரிய சரீரத்தோடு எழுந்து என் இயேசுவோடு சேர்ந்துகொள்வேன் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

**எல்லாருக்கும் எல்லாம் ஒரே விதமாக சம்பவிக்கும், சன்மார்களுக்கும் துன்மார்கனுக்கும் நற்குணமும், சுத்தமுள்ளவனுக்கும், சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும், பலியிடாதவனுக்கும் ஒரே விதமாய் சம்பவிக்கும்**. பிர. 9:2 ஆகவே இப்படித்தான் என் மரணம் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கில்லை. எப்படிப்பட்ட மரணத்தையும் எதிர்கொள்ள நான் தயார்.

ஒரு வேளை என் ஊரிலேயே என் வீட்டில் நான்மரித்து போனால் தேவையில்லாத, பிரயோஜனமில்லாத **எந்த சடங்கும்** செய்யக்கூடாது என்பது என் ஆசை, யாருக்கும் காத்திராமல் எவ்வளவு சீக்கிரம் என் உடலை அடக்கம் பண்ணமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் என் உடலை அப்புறப்படுத்தப்படவேண்டும்.,

**செத்தபின்** என் முகத்தை கடைசியாக பார்ப்பதில் என்ன லாபம். அப்படி அதில் என்ன ஆறுதல் வந்துவிடப்போகிறது. ஆகவே முக்கியமானவர்கள் வரவுக்காக என் உடலை வைத்துக்கொண்டு மற்றவர்களை காத்திருக்க செய்ய வேண்டாம்.

மரித்தவர் தலைமாட்டில் மெழுகுதிரி கொளுத்தி வைக்கவேண்டும் என்பது வேத வசன சட்டம் அல்ல. ஆனால் மெலுகுதிரி நாற்றங்களை இழுத்துக்கொள்ளும் தன்மை உள்ளது. ஆகவே மெழுகு திரி வைப்பது தவறில்லை. ஆனால் அதை வைத்துதான் ஆகவேண்டும் என்பதும் கட்டாயமில்லை. அதை தலைமாட்டில் வைப்பது. வருபவர்கள் என்முகத்தை பார்க்கும் வசதிக்காக அந்த நோக்கத்தின் அடிப்படையில் அப்படி செய்யலாம். ஐரோப்பிய நாடுகளில் சாப்பாடு மேடையில் மின்சாரம் இருந்தாலும் மெலுகு திரி கொளுத்தி வைக்கிறார்கள். மீன் போன்ற மாமிச வாசனைகளை மெழுகு திரியிலிருந்து வெளிவரும் புகை சரிபடுத்திவிடும் என்கிறதாக கூறுவார்கள். அந்த நோக்கத்தில் துர்சவாசனை நீங்க மெழுகுதிரி வைப்பதில் தவறில்லை.

என் உடலுக்கு எந்த மாலையும் போடக்கூடாது. அறியாமல் யாராவது மாலை கொண்டு வந்து போட்டால் தடுக்கவேண்டாம். அவர்கள் போட்டவுடன் அதை எடுத்து தனியாக வைத்துவிடவேண்டும். புறமதஸ்தவர்கள் தங்கள் நாகரீகத்தின்படி அப்படி செய்வார்கள். ஆகவேதான் தடுக்க வேண்டாம் என்று கூறுகிறேன். அவர்கள் போன பிறகு அந்த மாலையை எடுத்துவிடலாம். உப்பு போடுவது சியக்காய்போட்டு அல்லது எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டுவது இப்படிப்பட்ட எந்த சடங்கும் என் சரீரத்துக்கு செய்யக்கூடாது. என் உடம்பு நாற்றம் எடுத்தால் உடம்பை கழுவி கொஞ்சம் சென்ட் போடலாம். அதுவும் அடக்கம் செய்யும்வரை கூடி நிற்கும் உற்றார், உறவினர் மற்றவர்கள் நாற்றத்தை அறிந்து கஷ்டப்படாமல் இருக்கவே நாற்றத்தை இந்த ஆலோசனை. **கோடி துணி** என்று புது துணி கண்டிப்பாக வாங்கக்கூடாது. என் உடலை மூட வீட்டில் உள்ள என் பழைய துணியே போதும். அப்படி ஒரு சடங்கு விசுவாசிகளுக்கு தேவையில்லை என்பதற்காக இதை இங்கு குறிப்பிட்டேன்.

ஒரு வேளை என மரண வேளையில் நான் மரிக்கும் முன் **சுவாசம்** இருந்து **பேசும் நிலை மட்டும்** நான் இழந்து போனால் **யாராவது என் காதில் கர்த்தருயை வசனத்தை** கூறிக்கொண்டே இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது கர்த்தருடைய **வசனங்களை காஸட்டில் பதிய வைத்து** அதன் மூலம் என் காதுகள் மாத்திரம் கர்த்தருடைய வசனங்களை கேட்க செய்ய வேண்டும் என்பது என் ஆசை.

காரணம், சில சமயம் பேச்சு நின்று போனாலும் ஒருவேளை என் சுய நினைவு மரணம் வரை அப்படியே இருக்கலாம். ஆகவே கர்த்தருடைய வசனத்தை கேட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அப்படியே நான் மரிப்பதை பாக்கிமாக கருதுகிறன். அது எனக்கு பெரும் ஆறுதலை கொடுக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அழுவது எனக்கு பிடிக்காத விஷயம். அது மாத்திரமல்ல ஒவ்வொருவருடைய அழுகை எப்படியிருக்கும் என்று எனக்கு தெரியும். இதை என் மரண சரீரத்தை காணவரும் ஒவ்வொருவருக்கும் கூறி, எச்சரித்து கொண்டே இருக்க இயலாது. ஆகவே அட்டையில் தயவு செய்து அழாதீர்கள், மனவேதனை இருந்தால் அதை கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள் என்று எழுதிவைத்தால் அது நல்ல ஆலோசனையாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்படி நான் எழுதுவது, அழுவது எனக்கு பிடிக்காது என்பதால் மட்டும் அல்ல. 1 தெச. 4:13ல் **நாம் மற்றவர்களைப்போல நம்பிக்கை இல்லாமல் துக்கிப்பது அறிவில்லாத தன்மை** என்று வேதம் கூறுகிறது. ஆகவேதான் அழவேண்டாம் என்று கூறுகிறேன்.

நான் மரித்துப்போன சமயத்திலோ அல்லது துக்க நிவர்த்தி கூட்டத்திலோ என்னைக் குறித்து **எந்த ஒருவரும் புகழ்ந்து பேச அனுமதிக்கவே கூடாது.** இது மிகவும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். என்னை **இகழ்ந்தவர்கள் வெறுத்தவர்கள்** அன்று நிச்சயமாக வானளாவ என்னை புகழ மனப்பாடம் செய்துகொண்டு அன்று வருவார்கள். அப்படிப்பட்ட புகழச்சி மாய்மாலமாகும். மேலும் நான் மரித்தபின் என்னை புகழ்வதால் யாருக்கும் எந்தவித பிரயோஜனமும் இல்லை.

ஆனால் என் அடக்க ஆராதனையில் ஒவ்வொரு மனிதனும் மரணத்தை எப்படி சந்திப்பது, **இரட்சிக்கப்படாமல்** மரித்தவர்க்கும் **இரட்சிக்கப்பட்டு** மரித்தவர்க்கும், மறுமையில் கிடைக்கும் **தண்டனை** அல்லது **ஆசீர்வாதம்** ஆகியவைகளை குறித்தும், **மரணத்துக்கு பின்** உள்ள நிச்சயத்தை குறித்தும் **வசன ஆதாரத்துடன்** பிரசங்கிக்கப்பட என்னை அடக்கம் செய்யும்வரை அங்கு வந்த ஜனங்கள், உறவினர்கள் அன்று இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கு ஒருமுறை பல உண்மையான விசுவாசிகளைக்கொண்டு அல்லது ஊழியர்களைக்கொண்டு அப்படி **பிரசங்கிக்க ஏற்பாடு** செய்ய வேண்டும். ஏறக்குறைய அது ஒரு கன்வென்ஷன் போல அமைந்து அன்று கலந்துகொண்ட ஜனங்களில் **ஒரு ஆத்துமாவையாவது** அன்று இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஆசையில் இதை வேண்டி கேட்கிறேன்.

என் ஆத்துமா **சாந்தியடைய** வேண்டும் என்று தவறாக யாராவது ஜெபித்துவிட்டால் ஜெபம் முடிந்த உடனேயே விவரம் அறிந்த யாராவது சத்தமாக ஒருவன் செத்துப்போனதற்கு பின் அவனுக்காக எப்படிப்பட்டவர் ஜெபித்தாலும் அவன் ஆத்துமா **சாந்தியடைய வழியே இல்லை.** செத்துப்போன பிணத்துக்காக யாரும் ஜெபம் பண்ணக்கூடாது என்று உடனே எழுந்து பிரசங்கமாகக் கூற வேண்டும்.

அப்படியே என் உடலை எடுத்துக்கொண்டு போகும்போது வழியில் ஆட்கள் கூடி நிற்கும் இடங்களிலெல்லாம் சத்தமாக **இயேசுவின் சுவிசேஷத்தையும்** மரணத்துக்குப்பின் உள்ள நிச்சயத்தை குறித்தும் ரோடு ஓரங்களில் ரோடு மூலைகளில் நிற்பவர்கள் கேட்க அறிவிக்க வேண்டும். இந்த மேற்கண்ட ஆசைகள் மிக நீண்ட நாளாக என் உள்ளத்தில் எழுந்த ஆசைகளாகும்.

அடக்க ஆராதனை மிக சுருக்கமாக அதே சமயம் நல்ல ஆவிக்குரிய செய்தியோடு முடிவுபெற வேண்டும். குழியில் வைத்தபின் நீங்கள் எல்லாம் **மூன்றுமுறை மண் அள்ளி போடவேண்டும்**

என்பது சட்டமல்ல. அப்படி செய்வது தவறுமல்ல, அது சடங்கு மாத்திரமே ஆகவே வந்தவர்கள் மண்ணை **அள்ளிப்போட்டு சரீரத்தை மூட** உதவினால் சரி.

அடக்கம் பண்ணிவிட்டு மூன்றாம் நாள் கல்லறைக்கு வரவேண்டும் என்பது சட்டம் அல்ல. தயவுசெய்து **மூன்றாம் நாள் பரலோ மெழுதிரியோ** கண்டிப்பாக கல்லறையில் வைக்காதீர்கள். என் கல்லறையில் மர சிலுவையோ வேறு எந்த சிலுவையோ வைத்தாலும் சரி. வைக்காமல் போனாலும் சரி, அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. பிசாசும் என் சரீரத்தை ஒன்றும் செய்து விட முடியாது.

என் ஆவி, ஆத்துமா தன்னை தந்த தேவனிடம் சேர்ந்துவிட்டபின் (பி. 12:7) இந்த **அழுகும் சரீரத்தினால்** ஒரு பிரயோஜனமும் இல்லை. என்மரணத்துக்கு பின் என்ற என் வாஞ்சையை நீங்கள் இப்போது வாசித்தீர்கள். நீங்கள் இதை எப்படி எடுத்துக்கொண்டாலும் சரி. ஆனால் என் மரணத்துப்பின் என் பிள்ளைகள் தொடர்ந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் இயேசுவுக்காக ஊழியம் செய்யவும், உங்கள் ஆலோசனைகளை அவர்களுக்கு அளித்து அவர்களை ஜெபத்தில் தொடர்ந்து தாங்குங்கள் அது போதும் எனக்கு. ஒரு வேளை என் மரணத்துக்கு முன்பாகவே **இயேசுவின் இரண்டாம் வருகை வந்துவிட்டால்** கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் **இயேசுவோடு போய்விடுவேன்.** அந்த நம்பிக்கை திட்டமாய் எனக்குண்டு. அல்லேலுயா !

நம்மில் (ஜாமக்காரன் வாசகர்கள் எல்லாரும்) ஒருவரும் அந்த வருகையில் விட்டுப்போகாமல் இயேசு இராஜாவோடு காணப்பட வேண்டும். இந்த ஆசையும் நிறைவேற வேண்டும் என்று வாஞ்சிக்கிறேன்.

**ஜாமக்காரன்** வாசகர்கள் ஒவ்வொருவரும் **இயேசுவின் வருகையையும்** அல்லது தங்களுடைய **மரணத்தையும்** சந்தோஷத்தோடு எதிர்கொள்ள சந்திக்க எப்போதும் **ஆயத்தமாக** இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவே சீக்கிரம் வாரும் ! மாற நாதா !

**ஜாமக்காரன்**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மைமுள்ளவன் என்று எண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்தரிக்கிறேன். 1 தீமோ 1:12

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# கிறிஸ்தவர்கள்

உலகத்திலேயே முதன்முதல் அந்தியோகியா என்ற துறைமுகப்பட்டிணத்தில் தான் **சீஷர்களுக்கு** கிறிஸ்தவர்கள் என்ற பெயர் இடப்பட்டது. **சீஷன்** என்றால் **பின்பற்றுகிறவன், கற்றுக்கொள்கிறவன்** என்று அர்த்தமாகும். இங்கு சீஷன் என்று குறிப்பிடுவது இயேசு தெரிந்தெடுத்த 12 சீஷர்கள் அல்ல. கிறிஸ்துவின் **வசனத்தின்படி** கிறிஸ்துவைப்போல் வாழ்ந்ததால் அன்றைய **விசுவாசிகளுக்கு கிறிஸ்தவர்கள்** என்று பெயர் வழங்கப்பட்டது. ஒருவன் **இரத்த சாட்சியாக** மரிப்பதைவிட அவன் கிறிஸ்துவின் சாட்சியாக **வீட்டிலே-உலகத்திலே** சாட்சியாய் வாழ **பல கஷ்டங்களை அனுபவித்து வாழ்வதைத்தான்** நம் தேவன் விரும்புகிறார்.

இந்த புதுவருடத்திலும், இனி வாழும் காலமெல்லாம் **பேச்சிலும், நடக்கையிலும்,உடையிலும் செய்யும் தொழிலிலும்** சாட்சியோடு வாழ்ந்து நம் இயேசுவுக்கு மகிமையாக வாழ்வோம்.

**நானே தெய்வம் என்பதற்கு நீங்களே சாட்சிகள்** என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா 43:12

**NOVEMBER-2024**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.